
பன்றித்தலைச்சியம்மன்

# பிள்ளைத்தமிழ்





ஆக்கம்:-

**செல்வராஜா சுதாகரன்**

(வயலூரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பன்றித்தலைச்சியம்மன்

# பிள்ளைத்தமிழ்

வயலூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | பன்றித்தலைச்சியம்மன் பிள்ளைத்தமிழ் |
| பதிப்பு | :- | 2019 மார்ச் |
| மலரின் அளவு | :- | A5 |
| எழுத்தின் அளவு | :- | 12 |
| கடதாசி | :- | 70g |
| பக்கங்கள் | :- | 40 |
| விலை | :- | 200/= |
| நூலாசிரியர் | :- | செல்வராஜா சுதாகரன் (வயலூரான்)<br>முத்துமாரி அம்மன்கோவில் வீதி,<br>மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.<br>(T.P.:-077 0710729) |
| அச்சுப்பதிப்பு | :- | திருக்கணித பதிப்பகம்,<br>டச்சுவீதி, சாவகச்சேரி. |
| அட்டைப்பட வடிவமைப்பு | :- | சு. வரோதயன் (Varo Creation's)<br>(T.P. No.:-0778631931) |
| ISBN No. | :- | 978-955-38036-2-7 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகையம்மன் ஆலய தர்மகர்த்தா**

உயர்திரு. சிவகுரு பஞ்சாட்சரம் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

ஈழவள திருநாட்டின் பிரசித்தி பெற்ற அன்னைத் தலமான மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன்மீது பாடப்பெற்ற **"பன்றித்தலைச்சியம்மன் பிள்ளைத்தமிழ்"** நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். மாட்டுத் தலை யைப் பன்றித்தலையாக்கிய அற்புத பெருமாட்டிமீது அழகு தமிழில் பிள்ளைத் தமிழை "கவிஞர் வயலூரான்" செ.சுதாகரன் அவர்கள் பாடியுள்ளார்கள். அவரது இம்முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

ஈழத்து தமிழுலகில் காலத்துக்குக் காலம் பல்வேறு தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெற்றதுடன் அவற்றில் கணிசமானவை பக்தியிலக்கியங்களாக இருக்கின்றமை சிறப்பிற்குரிய அம்சமாகும். ஒரு இனத்தின் பண்டைய வரலாற்றையும், மரபுகளையும், வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொள்வதற்கு இவ்விலக்கியங்கள் அவசியமானவையாக காணப்படுகின்றன. பன்றித்தலைச்சியம்மை மீது ஈழத்து இலக்கிய வித்தகர்கள் வித்துவான் சி.பொன்னம்பல பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, அருட்கவி சி. விநாசித் தம்பிப் புலவர், சிவஸ்ரீ. த.காசிநாதக்குருக்கள் போன்றோர் பல்வேறு இலக்கியப் படைப்புக்களை மேற்கொண்டிருந்தனர். அந்தவகையில் தற்போது " கவிஞர் வயலூரான்" செ.சுதாகரன் அவர்களும் பிள்ளைத் தமிழ் என்ற இலக்கியவடிவில் ஆலயவரலாறு, ஆலயச்சூழல், அன்னையின் அருளாட்சி போன்றவற்றைப் போற்றிப் பாடியுள்ளார்கள். இது ஒரு வரலாற்றுச் சான்றாக நிலைத்து நிற்கக்கூடிய இலக்கிய முயற்சியாகும். அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அன்னையின் அருட்கடாட்சம் நிறைவாக அவருக்குக் கிடைக்க பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவ.பஞ்சாட்சரம்**
தர்மகர்த்தா,
மட்டுவில் வடக்கு,
பன்றித்தலைச்சிக் கண்ணகையம்மன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி பிரதேச செயலரின் வாழ்த்துரை

ஈழத்திருநாட்டில் தென்மராட்சி மண் சகல வளங்களும் நிறைந்தது. இறையருள் பெருகும் வகையில் ஆன்மீகஸ்தலங்கள் நிறையவே அமைந்திருப்பது சிறப்பிற்குரியது. இறைவனை குழந்தை யாக நினைத்து அக்குழந்தைப்பருவத்தின் பத்துப் படிநிலைகளையும் பாடிப்பரவுவது பிள்ளைத்தமிழாகும். இத்தகு பிள்ளைத்தமிழ் பல ஆலயங்கள் மீது எமது சான்றோர்கள், ஆன்றோர்கள் பாடிப்பரவி யிருப்பது பெருமைக்குரிய விடயம். அந்த வகையிலேதான் எமது தென்மராட்சியின் வரலாற்று சிறப்பு மிக்க அம்பாள் தலமான மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் மீது வயலூரான் என்று அழைக்கப்படும் தென்மராட்சி மண்ணின் மைந்தன் எமது செயலக உத்தியோகத்தர் திரு. செல்வராஜா சுதாகரன் அவர்கள் பிள்ளைத்தமிழ் பாடியிருப்பது வரவேற்பிற்கும் வாழ்த்துக்குமுரிய விடயமாகும்.

திரு. செ. சுதாகரன் அவர்கள் தனது பிறப்பிடமான கல்வயல் வேதவனப்பிள்ளையார் மீதும் ஏலவே பிள்ளைத்தமிழ் ஒன்று பாடி யிருக்கின்றார். இவரது இம்முயற்சி தொடர வேண்டும். அம்பாளின் சிறப்பிற்குரிய பங்குனித்திங்கள் விசேட பொங்கல் நாளில் இப் பிள்ளைத்தமிழ் வெளியீடு செய்யவிருப்பது மிகவும் மகிழ்ச்சிக் குரியதாகும். “பன்றித்தலைச்சி அம்மன் பிள்ளைத்தமிழ்” நூல் வெளியீடு சிறப்புற அமைய வாழ்த்துக்கூறி அமைகின்றேன்.

**திருமதி தேவந்தினி பாபு**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழ் இலக்கியம் நீண்ட வரலாற்றினையும் ஆழமான புலமை யினையும் கொண்ட ஒரு பல இலக்கிய வடிவங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இலக்கியத்தின் செழுமை என்பது அது காலந் தோறும் தன்னை புதுப்பித்துக்கொள்வதிலேயே தங்கியுள்ளது. இந்த வகையில் தமிழ் இலக்கியம் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல புதிய புதிய இலக்கிய வடிவங்களையும் இலக்கிய பாடுபொருள் களையும் தனக்குள் உள்வாங்கி தன்னை செழுமைப்படுத்தி வளர்ந்துள்ளது.

இந்த நிலையில் ஈழத்து இலக்கியமும் தனக்கே உரிய தனித்துவமான வழிகளில் தன்னை காலந்தோறும் மெருகேற்றி யுள்ளது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு என்பது ஒரு பொற்காலமாகும். பல அறிஞர்கள் தோற்றம் பெற்று பல அரிய இலக்கியங்களை தந்த காலமாக அது விளங்குகின்றது.

தமிழ் இலக்கியத்தின் சிற்றிலக்கியம் பேரிலக்கியம் என்ற வகைப்பாட்டினுள் சிற்றிலக்கியவகைமையில் ஒன்றாக விளங்குவது தான் பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். தமிழில் தொன்னூற்றாறு வகையான பிரபந்த வகைமையில் பிள்ளைத்தமிழ் புலமைச் செருக் கினைக்கொண்ட இலக்கிய வடிவமாகும். இப் பிள்ளைத்தமிழ் ஆண் பால் பிள்ளைத்தமிழ் பெண்பால் பிள்ளைத்தமிழ் என்ற இரண்டு வகையான பிரிவுகளில் பாடப்பட்டு வருகின்றது.

புலவர்கள் தாம் விரும்பிய அரசர், உயர்ந்த மனிதர்கள், தெய்வங்கள் ஆகியோரை குழந்தையாக உருவகித்து கற்பனை வளத்தொடு பாடப்படுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். மூன்று மாதம் முதல் இருபத்தொரு மாதம் வரையான குழந்தையின் வாழ்க்கைக்காலத்தை பத்து பருவங்களாகப் பிரித்து காப்புப்பருவம், செங்கீரைப்பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வருகைப்பருவம், அம்புலிப்பருவம், அம்மானைப்பருவம், நீராடற் பருவம், ஊசற்பருவம் என பத்துப்பருவங்களில் ஒவ்வொரு பருவத் துக்கும் பத்துப்பத்து பாடல்கள் வீதம் ஆசிரியவிருத்த யாப்பில் பாடப்படுவது இதன் இலக்கண அமைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழவி மருங்கினும் கிழவதாகும்" என்ற தொல்காப்பிய நூற்பாவில் இருந்து ஆரம்பித்த பிள்ளைத்தமிழ் இலக்கண வடிவம் தமிழுக்கே உரிய தனித்துவமான இலக்கிய வடிவமாகும். தொல் காப்பியத்தின் பின்னர் பன்னிரு பாட்டியலும் பிள்ளைத்தமிழ் இலக்கணம் பற்றி கூறியிருப்பினும் பெரும்பாலும் தொல்காப்பியம் கூறிய இலக்கண முறைப்படியே புலவர்கள் தமது பிள்ளைத் தமிழினை படைத்து வந்துள்ளார்கள்.

ஈழத்து இலக்கியப்பாரம்பரியத்தில் பத்தொன்பதாம் நூற் றாண்டில் பெருவாரியாக தோன்றிய இவ்விலக்கியம் இருபது, இருபத்தியோராம் நூற்றாண்டுகளில் வெகுவாக சரிந்து சென்று இன்று பிள்ளைத்தமிழ் இலக்கியம் மிகமிக அரிதாகவே பாடப்பட்டு வருகின்றது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. முறையான யாப்பிலக்கண பயிற்சி உள்ளவர்கள் இல்லாமை. இலகுவில் வாசித்து விளங்கக்கூடிய நிலையில் இல்லாமை, மரபு இலக்கிய புலமை உள்ள புலவர்கள் இல்லாமை போன்ற காரணங்களினால் இன்று பிள்ளைத்தமிழ் இலக்கியம் வீழ்ச்சி கண்டுள்ளது.

வரலாற்றின் அரிய செய்திகளை அறிந்துகொள்ளும் இந்த இலக்கியத்தின் மீள்வருகை இக்காலத்துக்கு அவசியமாக உள்ளது. இந்த குறைகளை நீக்கும் பொருட்டு தென்மராட்சியில் உள்ள புகழ்பெற்ற புராதன ஆலயமாக விளங்கும் பன்றித்தலைச்சியம்மன் மீது கவிஞர் வயலூரான் அவர்களால் பிள்ளைத்தமிழ் பிரபந்தம் ஒன்று பாடப்பட்டு இருப்பது சிறப்பிற்குரியதாகும்.

வயலூரான் என்ற புனைபெயரில் எழுதிவரும் திரு செர்வராஜா சுதாகரன் அவர்கள் சிறந்த பண்பாளர் தமிழ் இலக்கியத்தின் பால் தீராத காதல் கொண்டவர். யாப்பிலக்கணத்தினை முறையாக பயின்று இன்றும் யாப்பிலக்கணத்தில் கவிதைகளை யாத்துவருகின்றார். மரபுக்கவிகைளையே காண முடியாமல் இருக்கின்ற இப்பிரதேசத்தில் இவரது மரபுக்கவிதை ஆக்கங்கள் சிறந்த முறையில் அமைந் திருப்பது இவரது புலமைத்திறத்தினை எடுத்துக்காட்டுகின்றது. எளிமையும், அழகியலும் கொண்ட இவரது பாக்கள் படிப்போர் அனைவருக்கும் எளிதில் விளங்கக்கூடியதாக இருப்பது காலத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றதாக அமைகின்றது. மரபு என்னும் இறுக்கமான கட்டமைப்பினை கொஞ்சம் தளர்த்திச் சொல் இறுக்கத்தில் இருந்து சொல்தெளிவினை இவரது கவிதைகள் கொண்டிருக்கின்றன. பன்றித்தலைச்சியம்மன் பிள்ளைத்தமிழ் அறுசீர் விருத்த யாப்பில் அழகுற பாடப்பட்டுள்ள ஒரு மரபு இலக்கியமாகும்.

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் புலவர்களுடைய புலமைத் திறத்தினை அம்புலிப்பருவத்திலேயே கண்டுகொள்ளலாம். அந்த அளவுக்கு புலவர்கள் தமது புலமைத்திறத்தினை அம்புலிப் பருவத் திலேயே காட்டியிருப்பர். அந்தவகையில் வயலூரான் அவர்களும் தனது புலமைத்துவத்தினை அம்புலிப்பருவத்தில் காட்டியிருப்பது சிறப்புக்குரியது. எளிமையாக சொற்கோர்வையால் அமைக்கப்பெற்ற இப்பிள்ளைத்தமிழினை யாவரும் எளிதாக பொருள் விளங்கி கற்றுக் கொள்ளலாம். பன்றித்தலைச்சியம்மனின் அருட்திறத்தினையும் வரலாற்றுச்சிறப்பினையும் எடுத்தியம்புவதாக இவ் விலக்கியம் அமைந்திருக்கின்றது. இவ்விலக்கிய முயற்சியில் ஈடுபட்ட கவிஞர் வயலூரானின் இவ்வாறான முயற்சிகள் தொடரட்டும். வாழ்த்துக்கள்.

**கு. றஜீபன்** M.A. (கலாசார உத்தியோகத்தர்)
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

தென்மராட்சி மண்ணின் தலைநகராக விளங்கும் சாவகச்சேரியின் வடபால் அமைந்துள்ள கல்வயல் என்னும் பதி எனது பிறப்பிடம். அப்பதியில் கோவில் கொண்டருளும் வேதவன விநாயகப் பெருமான்மீது 2013-ம் ஆண்டிலே ஒரு பிள்ளைத்தமிழ் பாடி வெளியிட்டிருந்தேன். அன்றுமுதல் நான் புகுந்த ஊரான மட்டுவிற் பதிமேவும் பன்றித்தலைச்சி அம்மன்மீதும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடவேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தேன். அது இன்றுதான் செயல்வடிவம் பெற்றுள்ளது. தற்போதுள்ள வெள்ளைக்கற்களால் அமைக்கப்பட்ட இவ்வாலயம் 1750-ம் ஆண்டு திரு. நாகர் கதிர்காமர் அவர்களால் அமைக்கப்பெற்றதாக யாழ் மாவட்டச் செயலகத்தில் உள்ள கோவில்கள் பற்றிய பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக 1991-ம் ஆண்டு வெளியான ஆலய கும்பாபிஷேக மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளின் முன்னெழுந்த பன்றித்தலைச்சிக் கண்ணகையம்மன் மீது பாடப்பெற்ற இப்பிள்ளைத்தமிழ். ஒரு பெண்பாற் பிள்ளைத் தமிழாகும். ஆண்பாற்பிள்ளைத் தமிழில் உள்ள முதல் ஏழு பருவங்களான காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகியவற்றுடன் அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பெண்பாற் பிள்ளைத்தமிழிற்குரிய மூன்று பருவங்களையும் இணைத்து இப்பிள்ளைத் தமிழைப் பாடியுள்ளேன். குறுகிய கால இடைவெளியில் இந்நூலை யாத்து வெளியிடுவதற்கு நல்லருள் நல்கிய எனது குலதெய்வமான எல்லாம் வல்ல வேதவன விநாயகப் பெருமானதும், அன்னை பன்றித்தலைச்சி அம்மனதும் திருத்தாள் பணிந்து இந்நூலை அடியவர்களாகிய உங்களிடம் அர்ப்பணிக்கின்றேன்.

மேலும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய ஆலய தர்மகர்த்தா, தென்மராட்சிப் பிரதேசசெயலர், அணிந்துரை வழங்கிய தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஆகியோருக்கும், அட்டைப்படம் வடிவமைத்த சு. வரோதயன் அவர்கட்கும், குறுகிய கால இடைவெளியில் இந்நூலை அழகுற பதித்துத்தந்த திருக்கணித பதிப்பகத்தினர்க்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன்
வயலூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 1. காப்புப் பருவம்

நீலக் கடல்மேலே நின்றுலவும் திருமாலே
நிறைபுகழ் மட்டுவிற் பதிமேவும்
சாலவே நல்லருள் தந்திடும் கண்ணகையை
சாற்றுமுயர் பன்றித் தலைச்சியை
கோல வெழிற் குழந்தையென ஆக்கியே
கூறுமுயர் பிள்ளைத் தமிழ்பாட
ஆலம் விழுதென அடியேனைத் தாங்கியே
அருள் தந்திடணும் ஐயனே.

மண்புகழும் மட்டுவிலூர் மேவி வாழும்
மாதரசி கண்ணகையின் மேலே
பண்புயரும் பிள்ளைத் தமிழொன்று பாடிப்
பாருளோர் படித்திடத் தரவே
கண்மூன்று உடைய கணபதியே நீயும்
கருத்துடனே காத்தருள வேண்டும்
எண்ணமது ஈடேற ஏரம்ப கணபதியே
என்றென்றும் காத்தருள வேண்டுமே.

வஞ்சியர் இருபால் வாகாய் அமர்ந்திட
வண்ண மயில்மேல் ஏறியே
அஞ்சிடும் அடியர்க்கு அபயமே நல்கும்
ஆறுமுகங் கொண்ட அண்ணலே
விஞ்சு புகழ்க் கண்ணகையின் மேலே
விரும்பிப் பிள்ளைத்தமிழ் பாட
தஞ்சமென உனையே சரண் அடைந்தேன்
தண்ணருளே தந்து காத்திடுவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியுமை பாகனே சந்திர புரத்தோனே
சஞ்சலம் தீர்த்தருள் புரிவோனே
பக்தியொடு அடியர் பாற்பொங்கல் பொங்கும்
பன்றித் தலைச்சியாள் மீதே
அக்கறை கொண்டே அருந்தமிழில் யானும்
அழகுறு பிள்ளைத்தமிழ் பாட
சிக்கல் தீர்த்தருள் செய்திட வேண்டும்
சிவப் பரம்பொருளே காப்பதாமே.

மண்டலங் காக்கும் மாதுமையே தாயே
மண்ணகம் புகழும் மாதரசியாம்
தண்ணருள் நல்கியே தரணியைக் காத்து
தனித்துவம் மிகவே விளங்கும்
பண்புயர் எங்கள் பன்றித் தலைச்சியை
பாலகியாய் யானும் ஆக்கியே
எண்ணரும் பிள்ளைத் தமிழொன்று பாட
என்றுமே காத்தருள் தாயே.

வெண்டா மரையில் விருப்புடனே அமர்ந்து
வித்தைகள் நல்கிடும் தாயே
கண்ணாகி யெம்மைக் காத்தருள் செய்யும்
கண்ணகைத் தாயைப் போற்றிக்
கொண்டாடி யவளைக் குழந்தையென நானாக்கி
கூறுபிள்ளைத் தமிழொன்று பாட
மண்டாடிப் பணிகின்றேன் மண்ணகஞ் சிறக்க
மனமுவந்து நீயும் காத்திடுவாயே.

மருதமரச் சூழலிலே மகிழ்வோ டமர்ந்தே
மண்ணகங் காக்கும் எங்கள்
பெருமையுறு கண்ணகைத் தாயவள் தன்னைப்
பேசரிய குழந்தை வடிவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையாய் யானுமொரு பிள்ளைத் தமிழ்பாடி
பேரறிஞர் சபையிலே பிரசவிக்க
குருவாய் வந்தே குறைகள் தீர்ப்பாய்
கூறும் பைரவப் பெருமானே.

பட்ட துயரெலாம் பார்மிசைப் போயகல
பக்குவமாய் அருளிக் காக்கும்
மட்டிலாப் புகழுடை மட்டுவில் மேவிடும்
மாதரசி கண்ணகைத் தாயை
இட்டமுடன் நானும் இனியநற் குழவியாக்கி
இன்றமிழிற் பிள்ளைக் கவிபாட
துட்டரை அழித்திடும் துர்க்கைத் தாயே
துயரின்றிக் காத்தருள் புரிவாயே.

செந்தா மரையிற் சிறப்புடனே யமர்ந்து
சீரருள் நல்கிடும் தாயாரே
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் நல்கிடும்
சிறப்புறு பன்றித் தலைச்சியை
வந்தனை செய்துமே வனப்புறு குழவியாக்கி
வண்டமிழால் பிள்ளைக் கவிபாட
தந்தருள் புரிவாய் தனலக்குமித் தாயே
தாள் பணிந்தேன் காத்திடுவாயே.

அன்றுன் அடியவன் ஆருயிர் காத்திட
ஆவினைப் பன்றியென ஆக்கி
நன்றுமே காத்த நற்கண்ணகைத் தாயே
நானுனைக் குழந்தையென ஆக்கி
இன்றோர் பிள்ளைக்கவி இனிதுறப் பாடிட
இன்னருள் வேண்டி நின்றேன்
என்றும் என்னுடன் இனிதுற நின்றே
ஏற்றமே பெற்றிடக் காப்பாயே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. செங்கீரைப்பருவம்

பங்குனியில் ஒன்றுகூடிப் பக்குவமாய் நீராடிப்
பாற்பொங்கல் பொங்கியே மகிழ்ந்து
தங்கள் குறைதீரத் தலைசாய்த்து வணங்கத்
தண்ணருள் தந்திடும் தாயாரே
மங்களமாய் இனியிந்த மண்ணகம் மீதில்
மக்களெலாம் ஒன்றாகி வாழவே
சங்கடம் தீர்த்துச் சகவாழ்வைத் தந்துநீ
சால்புடன் செங்கீரை யாடியருளே.

அன்றுன் அடியவன் ஆபத்தில் சிக்கிடவே
ஆவினைப் பன்றியென ஆக்கி
நன்றுமே அவனை நாநிலத்திற் காத்தாய்
நலமெலாம் தந்துமே மகிழ்ந்தாய்
இன்றெம் துயர்கள் இல்லாமற் போயகல
இன்னருள் நீயெமக்கு ஈந்தே
உன்புகழ் உயர்ந்திட உலகமே போற்றிட
உவந்து செங்கீரை யாடியருளே.

மருதமரஞ் சூழ்ந்திட மருங்கினில் வயல்கள்
மங்கலமாய் நிறைந்து விளங்கப்
பெருமையுறு மறிஞர்கள் பெட்புடனே வாழ்ந்த
பேர்புகழ் மட்டுவில் வடபால்
அருள்தந்து வீற்றிருக்கும் அன்னை கண்ணகையே
ஆனந்தம் நல்கிடும் தாயாரே
இருளெலாம் அகற்றி இன்னொளி வீசிடவே
இருந்து செங்கீரை யாடியருளே.

நல்லறிஞர் பலர்வாழ் நனிபுகழ் மட்டுவிலில்
நாடியே வந்தமர்ந்த நற்றாயே
எல்லோரும் போற்றி ஏற்றியுன்னைப் பணிய
ஏற்றருள் நல்கிடும் எழிலுருவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோர் கோபுரமும் நல்லெழில் மண்டபமும்
நன்கமைந்த சூழலிலே யமர்ந்து
அல்லலெலாம் தீர்த்து அடியரைக் காத்துமே
ஆனந்தமாய் செங்கீரை யாடியருளே.

பங்குனியிற் பொங்கலது பார்புகழ நடக்கப்
பக்தரெலாம் கூடியே மகிழத்
திங்களது மார்கழியிற் திருவிழாக் கோலம்
செழிப்புடனே நடந்திடக் கண்டே
தங்கள் குறைகூறித் தாமடியார் வணங்கத்
தண்ணருள் நல்கிடும் தாயாரே
பங்கமெலாம் அகற்றிப் பார்புகழ வைத்தே
பாடிச் செங்கீரை யாடியருளே.

வேண்டுவார் வேண்டுவதை விரும்பியே அருளும்
வித்தகியே எங்கள் கண்ணகையே
மூண்டெழு பகையெலாம் முழுதாய் விரட்டியே
முனைந்தருள் நல்கிடும் தாயாரே
ஈண்டெழு துயரினை இல்லாமற் செய்துமே
இன்பமே நல்கியருள் இறையே
மாண்புறு மட்டுவிற் பதியினிலே அமர்ந்து
மகிழ்ந்து செங்கீரை யாடியருளே.

கழனியொடு கனித்தோட்டம் கவினுறவே நிறைந்து
காட்சிதரும் மட்டுவிலிற் தோன்றிப்
பழவினைகள் தீர்த்தருளும் பண்புடைத் தாயே
பார்புகழும் எங்கள் கண்ணகையே
நிழலாகும் மருதமரத்து நிலத்தினிலே அமர்ந்து
நின்னருளை நல்கிடும் தாயாரே
அழகுறவே குழந்தையென அவனியிற் தோன்றி
ஆனந்தமாய் செங்கீரையாடியருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவிலாம் நற்பதியில் மாண்புடனே தோன்றி
மக்கள்தமைக் காத்திடும் மாதே
துட்டர்தமை யழித்துத் துயரெலாம் போக்கும்
தூயவளே எங்கள் கண்ணகையே
பட்டதுயர் போதுமினிப் பார்மிசை நாங்கள்
பல்லாண்டு மகிழ்வோடு வாழவே
இட்டமுடன் நீயெழுந்து இன்னருளை நல்கி
இனிது செங்கீரை யாடியருளே.

தண்ணளிசேர் அந்தணர்கள் தாமொன்று கூடித்
தம்மினிய குரலாலே வேதமோதப்
பண்ணிசை வல்லோர் பக்குவமாய்க் கூடியே
பண்ணோடு தேவார புராணமோதக்
கண்ணகையாம் உந்தனடி கருத்துடனே பற்றிக்
காதலுடன் உன்னடியார் வணங்க
விண்ணோரும் வந்துனை விரும்பியே வணங்க
விரும்பிச் செங்கீரை யாடியருளே.

எத்திசையும் புகழ்விளங்கு எழிலார் மட்டுவிலில்
ஏற்றமுடன் அமர்ந்துள எம்தாயே
வித்தையெலாம் பெற்றுநாம் விஞ்சுபுகழ் பெறவே
விரும்பி யருள்தரும் வித்தகியே
நித்தமும் உன்னையே நீள நினைந்துருகும்
நின்னடியார் தமையே காத்துச்
சத்தமே யின்றிச் சாந்தமாய் அமர்ந்துநீ
சாய்ந்து செய்கீரை யாடியருளே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தாலப்பருவம்

தென்னை பலாமாமலி தென்மராட்சி மேவும்
சீர்மட்டுவிற் பதியமர்ந்த தாயே
முன்னை வினையது முற்றுறப் போயகல
முனைந்தருள் நல்கிடும் முத்தே
கன்னற் கனியமுதே கண்ணகைத் தாயாரே
கதறிடும் அடியரைக் காத்தே
இன்னல் தமையகற்றும் இறையே எங்கள்
இனியவளே தாலோ தாலேலோ.

அழகுறும் மண்டபம் அருகினில் திருக்கேணி
அமைந்திடப் பெற்ற அன்னையே
முழவடித்து உன்னருகில் முன்னோர் கூடியே
முனைப்பாய் உன்கதை கூறிட
அழகுறப் பவனிவரும் அன்னை கண்ணகையே
அன்பரைக் காத்திடும் தாயாரே
கழனிகள் சூழ்ந்து கவினுறவே விளங்கக்
கண்ணகையே தாலோ தாலேலோ.

பங்குனித் திங்களிலே பக்தரெலாம் கூடிப்
பக்குவமாய் கேணியிலே நீராடிப்
பங்கமெலாம் தீர்ந்திடப் பாற்காவடி எடுத்தே
பக்தியொடு ஆடியே பவனிவர
வெங்களம் தந்திட்ட வடுவெலாம் தீரந்திட
விரும்பித் தூக்குக் காவடியாட
எங்கள் குறையெலாம் இனிதுறவே நீக்கும்
எழிலே தாலோ தாலேலோ.

பாற்குண மாதமெனப் பாருளோர் போற்றும்
பங்குனியிற் பொங்கலைக் கண்டே
ஊற்றாகு மன்போடு உளமாரப் பணிந்தே
உவந்தடியார் போற்றிட வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீற்றமே கொள்ளாது செகத்துளோர்க் கருளி
சிந்தை மகிழ்ந்திடும் தாயே
ஆற்றல் தனைநல்கி அகிலத் துயர்த்தும்
அன்னையே தாலோ தாலேலோ.

ஆதி யுறுதியிலுள அத்தாய் வளவுக்குள்
அமர்ந்துள எங்கள் கண்ணகையே
ஆதிமுதல் அடியார்க் கருள்மழை பொழிந்து
அகிலத்து உயர்த்தி மகிழ்ந்தவளே
நாதியற்று உன்னடியை நாடியே வருவோர்க்கு
நல்லருள் நல்கியே இருந்தவளே
சோதிவடி வானவளே சூழ்ந்தோரைக் காக்கும்
சுந்தரியே தாலோ தாலேலோ.

மார்கழியிற் தேரோடும் மகத்தான திருவிழா
மண்ணகம் புகழவே நடக்கும்
சேர்ந்தடியார் ஒன்றாகித் திருவடிகள் சரணாகித்
திருமுறைகள் நிறையவே ஓதிடப்
பார்முழுதும் உள்ளவுன் பக்தரெலாம் கண்டு
பரவசம் கொண்டுமே ஆடிவர
தார்அணிந்து அழகுறும் தையலே எங்கள்
தாயே தாலோ தாலேலோ.

அறுகாலப் பூசையுன் ஆலயத்தில் நடக்கும்
அன்னதானமும் நிறையவே இருக்கும்
மறுவெலாம் போயகல மக்களெலாம் கூடி
மனங்குளிர வேண்டிப் பணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுமுயர் புகழுடைய உத்தமித் தாயாரே
உலகுபுகழ் கண்ணகைத் தெய்வமே
தறிகெட்டு அழியும் தருணரைக் காப்பாய்
தாயே தாலோ தாலேலோ.

ஆவலுடன் அன்னையர்கள் ஆலயம் வந்து
அடியழித்து வணங்கி வேண்ட
காவடிகள் பலவெடுத்து காளையர்கள் கூடி
கருத்துடனே ஆலயம் நாடிவரச்
சேவடிகள் பணிவோர்க்குச் சிறப்பெலாம் நல்கி
சிந்தைமகிழ் கண்ணகைத் தாயே
நாவரண்டு உன்புகழை நாமிங்கு பாடிட
நனிமகிழ்வாய் தாலோ தாலேலோ.

கணபதியும் முருகனும் கருதுமுயர் பைரவரும்
கண்ணனும் வராகியும் சூழக்
குணபதியாய் அமர்ந்து குவலயமே காக்கும்
குலமுதலே எங்கள் தாயாரே
பிணக்குகள் இன்றியுன் பிள்ளைகள் நாமெலாம்
பெட்புடன் இப்புவி வாழக்
கணக்கின்றி யருள்வாய் கருணையும் தருவாய்
கண்ணகையே தாலோ தாலேலோ.

மண்ணகமே போற்றும் மாண்புறு மட்டுவிலில்
மருதமரச் சூழலில் அமர்ந்த
கண்ணகையே எங்கள் கற்பினிற் கணியே
கருத்துடன் உன்னடியே பணிந்து
எண்ணரும் அடியார்கள் ஏற்றமுற வேண்டி
இருந்து நேர்த்திக் கடன்செய
தண்ணருள் தருவாய் தலம்புகழ் எங்கள்
தாயே தாலோ தாலேலோ.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சப்பாணிப்பருவம்

பண்டித மணியொடு பல்லறிஞர் வாழ்ந்த
பார்புகழ் மட்டுவிற் பதியில்
திண்ணமாய் அமர்ந்து திருவருள் புரியும்
திருவே எங்கள் கண்ணகையே
பண்ணோடு பாடல்கள் பாடியே அடியார்
பக்தியோடு உன்னைப் பணியத்
தண்ணருள் நல்கிடும் தாயே எங்கள்
தவமே சப்பாணி கொட்டியருளே.

தீர்த்தக் கேணிதனிற் திருத்தமாய் நீராடித்
திருத்தலம் வலம்வந்து வணங்கி
ஆர்த்த பிறவித் துயரகல அடியரெலாம்
அடிபணிந்து உன்னையே வழுத்தி
ஊர்புகழ் முட்டிக் கத்தரிக் காயொடு
உவந்து பொங்கல் கறிசெய்து
சீர்பெற உனக்கே சிறப்பாய் நிவேதனம்
செய்திடச் சப்பாணி கொட்டியருளே.

அழகுறு மதிலும் அன்னதான மண்டபமும்
அணிசேர் மணி மண்டபமும்
நிழலாய் நிற்கும் நீண்டவுயர் மருதுகளும்
நின்புகழை நின்றுமே கூட்டும்
அழகுற அமைந்த திருவீதி மூன்றும்
அழகுயர் பூமரச் சோலையும்
தழலென எரிக்கும் வெயிலினைத் தணிக்கத்
தாயே சப்பாணி கொட்டியருளே.

கத்தரித் தோட்டமும் கவினுறு வயல்வெளியும்
காட்சிதரும் சூழலில் அமர்ந்த
வித்தகியே எங்கள் விருப்புறு கண்ணகையே
விண்ணுளோர் வியந்து போற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமியே இங்கிந்த ஊர்புகழ் அன்னாய்
உன்னடி யார்கட்கே அருளிச்
சத்தமின்றி இருப்பாய் சகமது மகிழச்
சாய்ந்து சப்பாணி கொட்டியருளே.

நவரத்ன மாலைகள் நனிமிகச் சூடியே
நனிமகிழ் கண்ணகைத் தாயே
தவமிகு மடியார் தங்கள் குறைதீரவுன்
தலமதிற் தினங்கூடி வணங்கப்
பவவினை தீர்த்துப் பக்குவமாய் காக்கும்
பண்புயர் பன்றித் தலைச்சியே
சிவத்தலம் மட்டுவிலிற் சிறப்புட னமர்ந்து
சிரித்துச் சப்பாணி கொட்டியருளே.

பங்குனியில் உன்கோயில் பரபரப்பு மிகுந்து
பல்லடியார் கூடியே மகிழ்வர்
திங்களது வந்தால் சீரடியார் ஒன்றாகித்
தீர்த்தக் கேணியதில் நீராடிப்
பங்கம் எல்லாம் போயகல வேண்டியே
பாற்பொங்கல் பொங்கி வைத்து
அங்கிருந்து உண்ணும் அழகைக் கண்டே
ஆனந்தமாய் சப்பாணி கொட்டியருளே.

உற்றதுயர் தீர்ந்திட உன்னடி பணிவோர்க்கு
உவந்தருள் நல்கிடும் தாயே
பற்றுடன் மட்டுவிற் பதியினில் அமர்ந்து
பக்தரைக் காத்திடும் பதியே
கற்றவர் கூடியே கண்ணகைத் தாயுனைக்
கைகூப்பித் தொழுதே பாடிட
செற்றவர் தம்மையே சிதைத்து நின்று
சிறப்பாய் சப்பாணி கொட்டியருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிய கருமம் எளிதாய் நிறைவேற
என்றுமே உன்னடி வேண்டிப்
பண்ணுடன் தேவாரம் பக்தர்கள் கூடிப்
பஜனை செய்துமே பணிய
எண்ணரும் அற்புதம் இப்புவியிற் காட்டிய
எளிமையின் வடிவே எம்தாயே
விண்ணோரும் போற்றும் வித்தகியே தாயே
விரும்பிச் சப்பாணி கொட்டியருளே.

தென்னை பலாமாமலி தென்மராட்சி தனில்
திகழும் மட்டுவிற் பதியதில்
என்றும் புகழொடு இருந்திடும் தாயாரே
எங்கள் கண்ணகைத் தெய்வமே
நன்றுமே சைவப் பண்பது காத்திடும்
நல்லடியார் தம்மைக் காத்தே
என்றும் இன்னருள் ஈந்துமே நிற்கும்
ஏந்தலே சப்பாணி கொட்டியருளே.

ஆதிமுதல் ஆனவளே அன்னை கண்ணகையே
அன்பரைக் காத்துமே நின்றவளே
ஓதிடும் அடியர்க்கு ஒருகுறையும் வாராது
உவந்தருள் நல்கியே நின்றவளே
நாதியற்று நாமெலாம் நாடியே வந்திட
நல்லருள் நல்கியே நின்றவளே
பூதியணி வேதியர்கள் புகழ்ந்துமே போற்ற
பூரித்துச் சப்பாணி கொட்டியருளே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. முத்தப்பருவம்

திண்ணமாய் உந்தன் திருவருளே வேண்டித்
        திரண்டடியார் கூடியுனைப் போற்ற
வண்ணமாய் அருள்தரு வாஞ்சைமிகு தாயே
        வரலாறு ஏற்றிடும் வடிவே
உண்ணாது உந்தனடி உவந்துமே போற்றி
        உன்பதி தன்னைச் சுற்றிட
திண்ணமாய் அருள்தருந் திருவே தாயாரே
        தித்திக்க முத்தந் தருகவே.

நெல்வயலும் தோட்டமும் நிறைந்துள மட்டுவிலில்
        நிறைந்தடியார் தொழுதிடும் தாயே
எல்லோரும் உன்னடியை ஏற்றியே தொழுதிட
        என்றும் நல்லருள்தனை ஈந்தே
பொல்லா வினையெலாம் போக்கிட முனையும்
        பொன்னான எங்கள் தாயாரே
சொல்லரும் பேறெலாம் சூழ்வோர்க் கருளிச்
        சுவையாய் முத்தங் தருகவே.

அறுகாலப் பூசையினை அனுதினமும் உந்தனுக்கு
        அந்தணர்கள் வேதமோதி நடாத்த
வறுமைநிலை நீங்கி வளமான வாழ்வுபெற
        வந்தடியார் கூடியே வணங்கிட
உறுமின்ப வாழ்வுதனை உவந்தளித்து நீயும்
        உளமகிழ்வு கொண்டே இருந்து
இறுதிவரை அன்பாய் இருந்திடும் தாயாரே
        இனித்திட முத்தந் தருகவே.

தஞ்சமென உன்னடி சார்ந்திடும் அடியர்க்கு
        தண்ணருள் நல்கிடும் தாயாரே
விஞ்சுபுகழ் மட்டுவிலின் வடபால் மேவியருள்
        வித்தகியே எங்கள் கண்ணகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுதல் நீக்கியே ஆறுதல் நல்கிடும்
அன்னையே கண்ணகைத் தாயே
மஞ்சமதில் அமர்ந்து மனமிக மகிழ்வாய்
மலர்ந்து முத்தந் தருகவே.

கல்வத்து சிவனாரும் கருதும் விநாயகரும்
களிப்புறு புவனேஸ்வரித் தாயாரும்
மெல்லியலா லெங்கள் முத்துமாரித் தாயாரும்
மேதகு மருதடி விநாயகரும்
நல்விதமாய் அமர்ந்துள நனிபுகழ் மட்டுவிலில்
நாடியருள் நல்கிடும் தாயே
சொல்லரும் புகழுடைச் சுந்தரியே தாயே
சுகமாய் முத்தந் தருகவே.

பண்டித மணியும் பகர்வேற் பிள்ளையும்
பாங்குடனே தோன்றி வளர்ந்த
எண்ணரும் புகழுடை எழிலார் மட்டுவிலில்
இருந்து நல்லாட்சி செய்தே
விண்ணவரும் போற்றி வியந்துமே இருக்க
விழைந்தருள் நல்கிடும் தாயே
கண்மலர வணங்கும் கண்ணகைத் தெய்வமே
காதலுடன் முத்தந் தருகவே.

தலம்நாடி வருவோரைத் தலைநிமிரச்செய்யும்
தாயாரே எங்கள் கண்ணகையே
நலமுயர மட்டுவிலாம் நல்லூரில் வந்திங்கு
நன்கருள் நல்கிடும் தாயாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலமுதலாய் உன்னையே கும்பிட்டு வணங்கிக்
குறைகூறும் அடியர்தமை ஏத்தி
நலமெலாம் நல்கிடும் நற்றாயே கண்ணகையே
நாடியே முத்தந் தருகவே.

தமிழோடு சைவமும் தழைத்தோங்கு மட்டுவிலில்
தலங் கொண்டமர்ந்த தாயே
தமியராய்த் தவித்துன் தலம்நாடி வந்துமே
தாளமோடு பஜனைகள் செய்ய
அமிழ்தென அருள்தனை அளித்திடும் தாயே
அன்னையே கண்ணகைத் தெய்வமே
அமிழ்தாம் உன்னிதழ் அழகாய்த் திறந்து
ஆசையாய் முத்தந் தருகவே.

பங்குனியின் கொடுவெயிலிற் பரவிடும் நோயகல
பக்தரெலாம் உன்னடியே பணிந்து
திங்களிலே ஒன்றாகித் தீர்த்தக் கேணியதில்
திருத்தமாய் நீராடித் தெளிந்தே
பொங்கலிட்டு வணங்கிப் பொருந்தும் அன்போடு
புண்ணியங்கள் பலதும் செய்தே
தங்கள் குறைதீர்த்திடத் தண்ணருள் நல்கிடும்
தாயாரே முத்தந் தருகவே.

நலமுறும் மட்டுவிலாம் நற்பதியது தன்னில்
நன்கே குடியமர்ந்த தாயே
அலறித் துடித்துந்தன் ஆலயத்து வந்தே
அல்லல் போக்கிட வேண்டி
குலந் தழைக்க வேண்டிக் கும்பிடுவோர்க்கு
குறைகள் எல்லாம் நீக்கி
மலமகற்றி எங்கள் மட்டுவிலூர் காக்கும்
மாதே முத்தந் தருகவே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. வருகைப்பருவம்

கற்றவர் நிறைந்து கவினுறும் மட்டுவிலில்
கருத்துடனே அமர்ந்த கண்ணகையே
செற்றவர் போயகல செருக்களம் சென்றிங்கு
செழிப்பினைத் தந்திட்ட தாயே
உற்றவர் ஒன்றாகி உள்ளமது மகிழ்ந்திட
உன்னடியே பணிந்து போற்றிட
நற்பதம் அருள்வாய் நன்மட்டுவில் சிறந்திட
நனிமகிழ்ந்து வருக வருகவே.

அற்புதம் பலசெய்த அன்னையே நீயிங்கு
அன்புடன் ஆடிநீ வருகவே
பொற்பதம் பணிந்தே பொங்கிப் பணிந்தோம்
புன்னகை புரிந்துமே வருகவே
கற்றவர் போற்றிடும் கண்ணகைத் தாயாரே
காசினி போற்றிட வருகவே
வெற்றியே நல்கியெம் வேதனைகள் தீர
விருப்புடன் வருக வருகவே.

பண்ணுடன் அடியவர் பஜனைகள் பாடிடப்
பார்மிசை நீயுமிங்கு வருகவே
எண்ணரும் அற்புதம் இப்புவியிற் செய்தாய்
எங்களைக் காத்திட வருகவே
நண்ணியே உன்னிடம் நற்பலன் பெற்றிட
நாடுவோர்க் கருள்தர வருகவே
புண்ணியம் மிகுந்து புகழுறு மட்டுவிலின்
புதல்வியே வருக வருகவே.

தக்கோர் போற்றிடும் தலமாம் மட்டுவிலின்
தாயாரே வருக வருகவே
பக்கமாய் வளர்ந்து பயன்தரு மருதமரப்
பாங்கமர் தாயே வருகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கணம் எண்ணிலும் எமக்கருள் நல்கியே
இருந்திடும் தாயே வருகவே
அக்கறை கொண்டுன் ஆலயம் வருவோர்க்கு
அருள்தர வருக வருகவே.

இச்சகம் தன்னில் இன்னலெலாம் நீக்கும்
இறையே வருக வருகவே
அச்சமது தவிர்த்து ஆனந்தம் நல்கிடும்
அன்னாய் வருக வருகவே
நச்சுவோர் தமக்கு நல்லருள் நல்கியே
நாநிலத்து உயர்த்திட வருகவே
அச்சது பொடிசெய்த அப்பனுடன் நீயும்
ஆனந்தமாய் வருக வருகவே.

முன்னை வினையெலாம் முற்றுற நீக்கி
முத்தியே நல்கிட வருகவே
என்றும் உன்னடி இறைஞ்சுவோர் தம்மை
ஏத்திட அருள்வாய் வருகவே
அன்றுன் அடியவன் ஆருயிர் காத்திட
அற்புதம் செய்தாய் வருகவே
என்றும் புகழுயர் எழிலார் மட்டுவில்
இறையே வருக வருகவே.

நித்தம் உன்னடி நினைப்போர் தமக்கே
நிறைவாய் அருள்வாய் வருகவே
இத்தரை தன்னிலெம் இன்னல்கள் நீக்கியே
எமக்கருள் தாயே வருகவே
வித்தை பலகாட்டும் வித்தகியே எம்மை
விண்ணுயரச் செய்திட வருகவே
சித்திகள் நல்கியிச் சீர்புவி தன்னில்
சிறப்புற வருக வருகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருகை யூன்றியே எழுந்து நின்றாடியிங்கு
இன்பமே தந்திட வருகவே
மருத மரநீழலில் மகிழ்ந்து விளையாடிட
மாதரசி நீயும் வருகவே
கருதும் அடியரைக் காசினியில் உயர்த்த
காதலுடன் நீயும் வருகவே
பெருமை மிகுமட்டுவிற் பதியினில் அமர்ந்து
பேறுகள் நல்கிட வருகவே.

பக்தர்கள் ஒன்றுகூடிப் பங்குனியிற் பொங்கலிட
பக்குவமாய் நீயும் வருகவே
எக்கணம் நினைப்பினும் எமக்கருள் தந்திடும்
இறையே வருக வருகவே
திக்கெலாம் புகழுடன் திகழும் மட்டுவிற்
தீந்தமிழ்த் தாயே வருகவே
சக்தியெலாம் நல்கியே சகமதில் உயர்த்தும்
தாயே வருக வருகவே.

பல்லறிஞர் வாழ்ந்து பார்புகழச் செய்த
பகர் மட்டுவிற் பதியில்
நல்லருள் நல்கிட நாடியே அமர்ந்த
நற்றாயே வருக வருகவே
வெல்லவரும் பகையை விரட்டி அடித்து
வெற்றிகள் தருவாய் வருகவே
நல்லோர் போற்றிடும் நற்றமிழ் தாயே
நாடியே வருக வருகவே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. அம்புலிப்பருவம்

மாண்புளோர் வாழ்ந்த மதிப்புயர் மட்டுவில்
மருதமரச் சூழலில் அமர்ந்து
வேண்டுவார் வேண்டுவதை விரும்பி அருளும்
வித்தகியே எங்கள் கண்ணகையே
காண்போர் மனங்கவர் கண்ணகைத் தாயாரே
காசினி போற்றிட வருகவே
மாண்புயர் தாயே மண்ணகம் வந்தே
மகிழ்ந் தம்புலி யாடவாவே.

வேதவொலி கேட்டுமே மிகுதுயர் துடைத்து
விருப்புயர் வாழ்வது பெறவே
காதலுடன் உன்னடி கைகூப்பி வணங்கிக்
காத்திருக்கும் அடியரைக் கண்டே
மேதகுபுகழ் மட்டுவில் மேன்மையுறு பதியில்
மிகவிரும்பி நீயும் அமர்ந்தே
கீதங்கள் இசைத்துக் கிளர்ந்து மகிழ்வாய்
கீர்த்தியுடன் அம்புலி யாடவாவே.

போற்றியே உன்னைப் பூசிக்க அருள்தந்து
புவனத் துயர்த்திடும் தாயே
கூற்றுவன் தந்திடு கொடுந்துயர் காத்திட
கும்பிட அருளும் தாயாரே
மாற்றமே தந்திட மருதமரச் சூழலில்
மகிழ்ந்து அருள்தரு மாதே
ஆற்றலை நல்கியெமை அகிலத் துயர்த்த
ஆனந்தமாய் அம்புலி யாடவாவே.

காவடிகள் ஆடிவரக் கரகமும் சேர்ந்திடக்
கன்னியர் பாற்செம்பு ஏந்திவரச்
சேவடியை நாடியுந்தன் சேய்கள் ஒன்றுகூடிச்
சிறப்புடனே பஜனைகள் செய்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலுடன் அந்தணரும் அரியபல வேதமோத
அற்புதம் செய்திடும் அன்னாய்
தேவரும் போற்றிடும் சிறப்புறு மட்டுவிலில்
சேர்ந்துமே அம்புலி யாடவாவே.

விண்ணவரும் போற்றி வணங்கிடும் எங்கள்
வித்தகியே கண்ணகைத் தாயே
மண்ணவர் தொழுது மனதினால் பணிந்தே
மாண்புற வேண்டிட அருளும்
கண்ணகைத் தாயே கவினுறும் மட்டுவில்
காத்திட அமர்ந்த தேவியே
எண்ணரும் அடியவர் ஏத்திட அருளியே
இனிதாய் அம்புலி யாடவாவே.

அருளாட்சி செய்திட அணிபுகழ் மட்டுவில்
அமர்ந்திடும் எங்கள் தாயாரே
மருதமர நீழலில் மகிழ்வுடன் அமர்ந்து
மக்கள் குறைதீர்க்கும் மருந்தே
கருதுமுயர் நீதியைக் காசினி உணரக்
காட்டிய எங்கள் தாயாரே
உருகிடும் அடியார் உயர்வுற வேண்டியே
உவந்து அம்புலி யாடவாவே.

நித்தம் அறுவேளை நிறைவான பூசைகள்
நின்னாலயம் தன்னில் நடக்கத்
தத்தம் குறையைத் தீர்த்திட வேண்டித்
தரணியோர் கூடியே வணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகியே எங்கள் கண்ணகைத் தாயாரே
விண்ணோரும் உனையே வணங்க
சத்தம் இன்றியருள் சகத்துளோர்க் கருளிச்
சாந்தமாய் அம்புலி யாடவாவே.

வேத வொலிகள் விண்ணளவும் ஒலித்திட
வெந்துயரும் தீர்ந்திடக் கண்டு
காத லுடனடியார் கைகூப்பி வணங்கும்
கண்ணகையே எங்கள் தாயாரே
நாத மொடிசைகள் நாற்புறமும் ஒலிக்கும்
நல்லதோர் ஆலயம் தன்னில்
ஏதம் அகற்றியருள் ஈந்திடும் தாயாரே
ஏற்றமாய் அம்புலி யாடவாவே.

சீர்பெருகு தென்மராட்சித் திருப்பதியே மேவும்
சிறப்போங்கு சாவநகர் மருங்கே
ஏர்பெருகு எழில்நகராம் ஏற்றமுறு மட்டுவிலில்
இருந்தாட்சி செய்யும் தாயாரே
ஊர்புகழு முத்தமியே உயர் கண்ணகையே
உற்றதுயர் போக்கிடும் உத்தமியே
பேர்பெருக வாழும் பெருமாட்டித் தாயாரே
பெட்புடன் அம்புலி யாடவாவே.

பண்டிதரும் புலவர்களும் பாடிப் பரவிடும்
பண்புநிறை ஊராம் மட்டுவிலிற்
கொண்டாடும் அடியர்தம் குறைகளை நீக்கி
குதூகலம் நல்கிடும் தாயாரே
தண்டமிழ் வல்லோர் தரணியிற் போற்றும்
தகைசால் கண்ணகைத் தாயாரே
மண்டாடி வேண்டுகிறோம் மண்ணகம் வந்தே
மகிழ்வாய் அம்புலி யாடவாவே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. அம்மானைப் பருவம்

வாண்மை நிறைந்த வல்லாளர் வழுத்திட
வரமருளும் எங்கள் தாயாரே
காண்போர் மனங்களைக் களிப்புறச் செய்யும்
காட்சிகள் நிறைந்த மட்டுவிலில்
வேண்டுவார் வேண்டுவன விரும்பியே அருளும்
வித்தகியே எங்கள் கண்ணகையே
மாண்புறு மட்டுவில் மங்கையரைக் கூட்டியே
மகிழ்ந்து அம்மானை ஆடியருளே.

கண்ணெகிழ உன்னடியைக் கரங்கூப்பி வணங்கி
காசினியோர் போற்றிசெய் திருக்க
பண்ணோடு புலவர்கள் பஜனைகள் செய்துமே
பாடிப் பாடியுனையே ஏத்திட
விண்ணவரும் போற்றிடும் வியப்புறு மட்டுவிலில்
விரும்பியே அமர்ந்த தாயாரே
மண்ணகம் மீதினில் மழலையாய்த் தோன்றி
மகிழ்ந்து அம்மானை ஆடியருளே.

கற்பூரச் சட்டிகளும் காவடிகளும் கூடிவரக்
காதலுடன் நேர்த்தியை நிறைவேற்றி
இற்றரை மாந்தர்தம் இன்னலை நீக்கிடவே
இருகரங் கூப்பி வணங்கிடவே
முற்றுற அவர்குறை மூழ்கடித் தருளும்
முழுநிலவே எங்கள் கண்ணகையே
கற்பினுக் கரசியே கலியுகத் தெய்வமே
கருத்துடன் அம்மானை யாடியருளே.

எட்டுத் திக்கிலும் ஏற்றமே கண்டிடும்
எழிலார் மட்டுவிற் பதியில்
முட்டிக் கத்தரிக் காயினில் நல்ல
முறையாய்ப் பாற்கறி வைத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டித் தயிருடன் களிப்புறு நீர்க்கஞ்சி
கலந்துமே வைத்திட அருந்தி
பட்டுப் பாவாடை பாங்காய் அணிந்துமே
பாடிப்பாடி அம்மானை யாடியருளே.

சிட்டுக் குருவிகளாய் சிறகடிக்கும் எங்கள்
சிறுமியரை ஒன்று கூட்டியே
வட்ட வடிவாய் வளைந்து சுற்றியே
வாகாய் அம்மானை ஆடுகவே
எட்ட நின்றுமே எம்மவர் கண்டு
எண்ணி மகிழ்வும் கொள்ளவே
தட்டித் தட்டித் தாளங்கள் போட்டுத்
தரணியில் அம்மானை யாடியருளே.

அமரரும் வந்துன் அடியிணை போற்றிட
ஆனந்தம் மிகவே கொண்டு
குமரியர் சூழ்ந்து கும்மிகள் கொட்டிக்
குதூகலம் மிகவே பெற்றுத்
தமதினம் தழைக்கத் தளிர்க்கரம் கூப்பி
தணிவாய் வேண்டி யிருக்கவே
குமரியென நீயுமிக் குவலயம் வந்தே
கூடியம் மானை யாடியருளே.

மங்கையர் கூடியே மகிழ்வுடன் ஆடி
மகிழ்வு கண்டிடும் அம்மானை
தங்கையிற் தட்டியே தையலர் கூடித்
தரணியில் ஆடிடும் அம்மானை
பங்கம் நீங்கிடப் பாவையர் கூடியே
பாரினில் ஆடிடும் அம்மானை
இங்கெம் மண்ணில் இனிதாய் நீயும்
இருந்து அம்மானை யாடியருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்போடு செங்கீரை தாலம் சப்பாணி
கருதுமுயர் முத்தம் வருகையொடு
யாப்புறு நல்லம்புலி நலமாய் கண்டுமே
யாண்டும் மகிழ்வாய் இருந்தாய்
தோப்புகள் சூழ்பதி மட்டுவில் மேவிடும்
சுந்தரியே எங்கள் கண்ணகையே
நாப்பண் அமர்ந்து நலமாய் நீயுமிங்கு
நாடி யம்மானை யாடியருளே.

பெருமையுறு தென்மராட்சி வடபால் மேவும்
பேரறிஞர் பலர்நிறை மட்டுவிலில்
மருதமரச் சூழலில் மாண்புடனே யமர்ந்து
மக்கள் குறைதீர்க்கும் மாதே
உருகியே யுன்னடி யுவந்து பணிந்திடும்
உன்னடியார் தமையே காத்து
வருதுயர் தீர்த்து வளம்பல நல்கியே
வாகாய் அம்மானை யாடியருளே.

ஓங்கிய புகழுறும் ஓரூராம் மட்டுவிலில்
ஒளிரும் பன்றித் தலைச்சியில்
பாங்காய் அமர்ந்து பக்தர் குறைதீர்க்கும்
பத்தினித் தாயே கண்ணகையே
தீங்குகள் எல்லாம் தீய்ந்திடச் செய்யும்
தேவியே எங்கள் தாயாரே
ஏங்கிடும் எம்மவர் ஏக்கமது தீர்ந்திட
எழுந்து அம்மானை யாடியருளே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. நீராடற் பருவம்

சந்தனமும் ஜவ்வாதும் சார்ந்து மணங்கமழச்
சரஸ்வதி முதலாம் நதிகளில்
சிந்தையது மகிழ்ந்திடச் சிறப்பாய் நீராடும்
சீரடியார் குறைகள் சிதைத்துமே
நந்தமிழ் மக்களை நலம்பெறச் செய்துமே
நனிமகிழ் கண்ணகைத் தாயாரே
உந்தன் உளமும் உடலும் குளிர்ந்திட
உவந்துமே நீராடி யருளே.

தக்கோர் போற்றிடும் தண்ணெழில் மட்டுவிற்
தாயே எங்கள் கண்ணகையே
மிக்கதுயர் போக்கிட மிகவே நல்லருளி
மேன்மை யுறும் எம்தாயாரே
பக்குவம் மிகுந்திடவே பக்தர்கள் கூடிப்
பாடிப் பஜனைகள் செய்திடவே
எக்கணமும் இளஞ்சூடாய் இருக்கும் உந்தன்
எழிற்கேணியில் நீராடி யருளே.

சீர்பூத்த தென்மராட்சிப் பதியினில் மேவும்
சிவம்பூத்த மட்டுவிற் பதியில்
பேர்பூத்த பன்றித் தலைச்சி யுன்னைப்
பேசரும் குழந்தையாய் எண்ணி
பார்போற்ற அடியார் பக்தியொடு வணங்க
பண்போ டருளும் தாயாரே
ஏர்பூத்த மட்டுவில் இன்னரும் பதியில்
இனிதாய் நீராடி யருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைக்கரங் குலுங்கிட வண்ண வரம்பையர்
வந்துமே வாழ்த்துகள் கூறிட
கிளைபரப்பி நின்றிடும் கீர்த்தியுறு மருதமரக்
கீழமர்ந்து அருள்தருந் தாயாரே
சளைக்காது ன்னடி சார்ந்துமே வணங்கிடச்
சந்நிதி வந்திடும் அடியார்
திளைத்திட அருள்தரும் தாயே கண்ணகையே
திருத்தமாய் நீராடி யருளே.

அன்னையர் பலர்கூடி ஆரத்தி யெடுத்திட
அணிகலன் மினுங்க அசைந்தே
மின்னிடைச் சேடியர் மிகவுனைத் தொடர்ந்து
மேனியைத் தீண்டியே விளையாட
உன்னருள் மழையை உலகோர் பெற்றிட
உவந்துமே பொழியும் தாயாரே
என்றுமுள வுந்தன் எழிலார் நீர்ச்சுனையில்
இறங்கி நீராடி யருளே.

நிரையாய்ச் சேடியர் நிந்தன் நீராடலுக்கு
நிறைவாய் பொருட்கள் கொண்டுவர
விரைவாய் வந்துமே விண்ணோர் தாமும்
விரைகமழ் பொருட்கள் தந்திட
கரைபுரண் டோடிடும் காதலுடன் அடியார்
களிப்புடன் காத்துமே இருக்க
திரையுடைக் கடலில் திளைத்துமே நீயும்
திருத்தமாய் நீராடி யருளே.

ஓங்குபுனல் வைகை ஓராறு தன்னில்
ஒய்யாரக் காவேரி ஆற்றில்
தாங்கிடு யமுனைத் தண்ணாறு தன்னில்
தரமுயர் சரஸ்வதி யாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்கிடும் கோதாவரித் திருநல் லாற்றில்
திளைத்துத் தவழ்ந்து தவழ்ந்துமே
ஏங்கிடும் அடியார்தம் இன்னல்கள் நீங்கிட
எழுந்து நீராடி யருளே.

இற்றிடு மோவென இருந்திடு முந்தன்
இடையில் பட்டாடை மின்ன
நெற்றியில் குங்குமம் நிறைவாய் இருக்க
நிறைவாய் மாலைகள் அணிந்தே
மற்றுள மங்கையர் மனமது மகிழ்ந்திட
மலர்வாய் அருள்தரு மாதே
பற்றுடன் உன்னைப் பணிவோர்க் கருளப்
பாங்காய் நீராடி யருளே.

பற்பல கேலிகள் பாங்குடன் செய்து
பளபளக்கு நீர்நிலை தன்னில்
மற்றுள தோழியர் மங்கலப் பொருட்கள்
மகிழ்ந்து பூசிச் சிரித்திட
கற்றவர் புகழும் கருநாகக் கூந்தலை
காற்றினில் விசிறிக் காட்டியே
பற்றுடன் இந்தக் பாருளோர் மகிழப்
பாங்காய் நீராடி யருளே.

நல்லறிஞர் வாழ்ந்து நனிபுகழ் உற்ற
நல்லூராம் மட்டுவிற் பதியில்
எல்லோரும் வந்துமே எளிதாய் நீராடி
ஏக்கங்கள் தீர்த்திடும் கோயில்
கல்லாதோர் கூடக் கருத்துடன் பாடிக்
கண்ணகை யுன்னையே போற்றிட
வல்வினை தீர்த்திடும் வண்ணம் நீயும்
வாகாய் நீராடி யருளே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஊசற்பருவம்

சீராரும் பவளத்தாற் கால்கள் நாட்டிச்
செப்பாரும் உபநிடதக் கயிறுகட்டி
பேராரும் நால்வேதப் பலகை பூட்டிப்
பெட்பாரும் நல்வைரச் சட்டமிட்டு
ஊரார் உவந்து உனக்கென அமைத்த
உயர்வண்ண ஊஞ்சலிலே யேறி
பாரார் போற்றுமுயர் மட்டுவிற் பதிமேவும்
பரிமளமே ஊசலாடி யருளே.

காதலுடன் அடியார்கள் கரங்கூப்பி யுன்றன்
கதைகூறித் தினமிங்கு வணங்கிட
நாதமுடன் வேதங்கள் நல்லந்தணர் ஓதிட
நல்லடியார் பஜனைகள் செய்திட
ஓதரும் புகழுடை உத்தமியே தாயாரே
உயர் வண்ண ஊஞ்சலேறி
சீதவள வயல்சூழ் சிறப்புறு மட்டுவிலின்
சேயே பொன்னூச லாடியருளே.

மண்புகழும் மட்டுவிலின் வடபால் மேவி
மக்கள் குறைதீர்க்கும் மாதே
விண்ணவரும் மண்ணவரும் விரும்பி யேத்த
விருப்புடன் அருளும் தாயே
கண்ணென எமையே காத்தருள் செய்யும்
கண்ணகைத் தாயே இங்கு
மண்ணவர் அமைத்த மலர்நிறை ஊஞ்சலில்
மகிழ்ந்து ஊசலாடி யருளே.

எப்பொழுதும் உன்புகழை ஏற்றமுறப் பாடிடும்
உம்மடியார் சூழ்ந்திருந்து ஏத்த
முப்பொழுதும் திருமேனி தீண்டிடும் அந்தணர்
முறையாய் வேதங்கள் ஓதிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பாமல் உன்னடி சரணைடைய வந்திடும்
சகத்துள மக்கட்கு அருளியே
இப்பாரோர் அமைத்த எழில்வண்ண ஊஞ்சலில்
இருந்து பொன்னூச லாடியருளே.

திருமுறைகள் பலவோதித் தினமுந்தன் அருள்நாடி
திரண்டிடும் அடியாரைக் காத்தே
அருமறைகள் ஓதிடும் அந்தணர்கள் தங்கள்
அருளோசை கேட்டுமிக மகிழ்ந்தே
மருதமர நீழலில் மாண்புடனே அமைந்த
மலர்கள் நிறை ஊஞ்சலேறி
பெருமையுறு மட்டுவிலூர் பேசரிய கண்ணகையே
பெருமகிழ்வாய் ஊசலாடி யருளே.

ஆதியில் கதிர்காமர் அமைத்த ஆலயத்தில்
அமர்ந்தவளே எங்கள் கண்ணகையே
வேதியர்கள் கூறுநல்ல வேதவொலி கேட்டே
விரும்பியருள் தந்திடும் வித்தகியே
ஆதிமுதல் உன்னடியை அடைந்திடும் அடியர்க்கு
அருள்மழை பொழியும் அன்னையே
சோதிவடி வானவெம் சுந்தரியே கண்ணகையே
சுழன்று பொன்னூச லாடியருளே.

விண்ணோரும் மண்ணோரும் விரும்பி யேத்தும்
வித்தகியே எங்கள் கண்ணகையே
எண்ணரும் அலங்காரம் எழிலாய்ச் செய்துள
எழிலான ஊஞ்சன்மிசை ஏறி
மண்ணகம் புகழும் மட்டுவிலூர் கண்ணகையே
மகிழ்ந்து ஊஞ்சல் ஆடியருளே
கண்ணெனை எமைக்காக்கும் கண்ணகைத் தாயே
களிப்புடன் ஊஞ்சல் ஆடியருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்மேகஞ் சூழ்ந்து புண்பட்ட எங்கள்
புண்ணிய தேசம் செழிக்க
ஊர்கோலம் சென்று உதவிகள் நல்கிடும்
உத்தமியே எங்கள் தாயே
பார்புகழ் எங்கள் பன்றித் தலைச்சியில்
பாங்குடன் அமர்ந்த பாவையே
ஏர்புகழ் மட்டுவிலூர் மருதமர நீழலில்
எழுந்து பொன்னூச லாடியருளே.

பூதகண நாதர்கள் போற்றி செய்திருக்கப்
புண்ணிய நல்லடியார் பணிய
நாதசுர மேளங்கள் நல்லிசை வழங்கிட
நலமுடன் அந்தணர் வேதமோத
ஏதங்கள் அகற்றி இன்னருள் நல்கியே
எங்கள் குறை தீர்த்திடும்
மாதரசி கண்ணகையே மண்ணகம் சிறக்க
மகிழ்ந்து ஊஞ்சலா டியருளே.

இந்திரனும் சந்திரனும் குடைகள் தாங்க
இன்னரும் அரம்பையர் கவரிவீச
சந்தமொடு வேதங்கள் அந்தணர் ஓதிட
சால்புறும் அடியார் சூழ்ந்திட
வந்தவினை எல்லாம் வாகாய்த் தொலைத்து
வையகத் துயர்த்தும் தாயே
செந்தமிழ் வளரும் சிறப்புறு மட்டுவிலில்
சேர்ந்தமர்ந்து ஊஞ்சலா டியருளே.

*---*---*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் ஆக்கத்தில் உருவானவை

1. பாலர் பாடல் திரட்டு :- 1997
2. வேதவனம் :- 2012
3. வேதவன விநாயகர் பிள்ளைத்தமிழ் :- 2013
4. வயலூரானின் வரிகள் :- 2016
5. நெஞ்சுறுத்தும் நிஜங்கள் :- 2017
6. பனிக்கண்டிக்காளி :- 2018

## வெளிவர இருப்பவை

1. பாலர் பைந்தமிழ்ப்பாடல்கள்
2. இதயத்துணர்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயலூரான் பற்றி.....

தென்மராட்சியின்கண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கல்வயல் கிராமமானது ஒரு அற்புதமானது. இங்கே பிறந்து வாழ்ந்தவர்கள்தான் உலகம் போற்றும் நற்கவிஞர் இ.முருகையன் மற்றும் இ.சிவானந்தன், ச.முருகையா, கல்வயல் வே.குமாரசாமி ஆகிய நான்கு கவிஞர்களுமாவார். அதேபோன்று புராண படன விற்பன்னராகவும் பலர் வாழ்ந்துள்ளார்கள். அவர்களில் ஒருவர்தான் புராண படன வித்தகர் சி. அப்பாக்குட்டி ஆவார். அவர் வழிவந்த பேரனார் தான் இங்கே இந்நூலை ஆக்கிய திருவாளர் செ. சுதாகரன் ஆவார்.

இவர் இளமையிலேயே கவிப்புலமையும் தமிழ்ப் புலமையும் கொண்டவராக விளங்கியவர். இவர் யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் இடைநிலை, முதுநிலைக் கல்வியை யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கல்வி பயின்றார். கல்வி பயின்றகாலம் முதல் தனியார் வகுப்புகளில் தமிழ் பாடத்தை மாணவர்களுக்கு போதித்து வந்துள்ளார். மட்டுவில் வடக்கு கிராமத்தில் பேரோடும் புகழோடும் வாழ்ந்து மறைந்த சிங்கப்பூர் பென்சனியர் என அழைக்கப்படும் அமரர் திரு. வே. குமாரசாமி அவர்களுடைய பேர்த்தியான ஜெ. சிவாஜினி அவர்களைத் திருமணம் முடித்து மட்டுவிலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இவர் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள்மீது மிகுந்த பக்தி கொண்டவர். பங்குனித்திங்கள் காலத்தில் அதிகாலை 3.00 மணிக்கே அம்பிகையின் தீர்த்தத்தடாகத்தில் நீராடி பொங்கல் செய்து பொழுது கலைவதற்கு முன்னர் வீட்டிற்கு சென்று விடுவார். அம்பிகையின் பக்தியின் பேறாக அம்பிகை மீது **"பிள்ளைத்தமிழ்"** ஆக்கியுள்ளது எமக்கு பெரும் பாக்கியமாகும். அவரின் ஆக்கத்திற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு அவர் பல கவிநூல்களை ஆக்கி வழங்கியதோடு அவரின் ஆக்கங்களின் சிறப்பின் பயனாக பல பட்டங்களையும் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும். அவர்பெற்ற பட்டங்கள் கல்வயல் வேதவன விநாயகர் ஆலயம்:- **வேதவனக்கவி மாமணி, தெய்வீகக்கவி வள்ளல்,** மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்தி விநாயகர் ஆலயம்:- **தமிழ்க்கவி,** உடுவில் குபேரகா கலைமன்றம்:- **கவிக்கோன், சமூகஜோதி,** நதியோர நாணல்கள் இலக்கியமன்றம் வரணி:- **தமிழ்நதி,** கவியுலகப்பூஞ்சோலை குழுமம் இந்தியா:- **கிராமிய மன்னன்** ஆகிய பட்டங்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் மீது பாடிய **"பிள்ளைத் தமிழ்"** நூலை யாபேரும் படித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்வதோடு அவர் மென்மேலும் பல கவியாக்கங்கள் செய்து மக்கள்முன் சமர்ப்பிக்க எல்லாம்வல்ல அம்பிகைஅருள் வேண்டி அவரை வாழ்த்தி அமைகின்றேன்.

**கா. சிவஞானசுந்தரம்**
திருக்கணித பதிப்பகம்,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







"அம்பிகையின் தடாகதீர்த்தம்
ஆறாப்பிணி தீர்க்கும் அருமருந்தாகும்"

ISBN 978-955-38036-2-7
9789553803627

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org